International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 03 Issue: 03 July to September 2021 www.irjtsjournal.org

# ஆனந்தாயி நாவல் முன்வைக்கும் பெண்நிலை

**முனைவர் அ.சர்மிளா,**
*கௌரவ விரிவுரையாளர்,*
*தமிழியல் உயராய்வுத் துறை,*
*அரசு கலைக்கல்லூரி,*
*உதகமண்டலம்.*

**ஆய்வுச் சுருக்கம்**

நாவல் என்பது இலக்கிய மறுமலர்ச்சி யுகம் பெற்றெடுத்த ஒரு கலை வடிவம் ஆகும். இருபதாம் நூற்றாண்டை தமிழ் இலக்கியத்தின் மறுமலர்ச்சிக் காலம் என்று குறிப்பிடுவர். தமிழில் ஓர் நூற்றாண்டு காலமாக நாவல் இலக்கியம் மிகச்சிறந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளது. மேலை நாட்டு இலக்கியக் கல்வியின் அறிமுகத்தால் தமிழில் அதுவும் குறிப்பாக உரைநடையில் பல புத்திலக்கிய வகைகள் இக்காலக் கட்டத்தில் உருவாகத் தொடங்கின. நாவல் இலக்கியத்திற்குச் சிறப்புமிக்க இடமும் உருவாகியது. நாவல் உருவாவதற்குப் பின்புலமாக நவீன காலத்தின் பல்வேறு வகையான பிரச்சினைகள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றுள், அரசியல் மாற்றங்கள், சமூக நிலைகள், உறவுகளிடையே ஏற்படும் விரிசல்கள், தனிமனிதப் பிரச்சினைகள், நவீன அறிவியல் கண்டுபிடிப்புகளால் உருவாகும் புதிய சமூக மாற்றம் என அதனைச் சுட்டிக்கொண்டே செல்லலாம். இவ்வகை எழுத்துகளில் சிவகாமியின் இடமும் கவனம் பெறத்தக்கது என்ற வகையில் அவருடைய எழுத்தின் அடிப்படைக்கான இடத்தை இக்கட்டுரையில் சுருக்கமாகக் காணலாம்.

**முன்னுரை**

சிவகாமியின் **ஆனந்தாயி** நாவலில் ஆனந்தாயி என்னும் கதாபாத்திரம் மிக முக்கியமான, முதன்மையான கதாபாத்திரம் ஆகும். கிராமப்புற பெண்களின் நிலை என்ற வகையில் ஆனந்தாயியைச் சுற்றியே கதைக்கருவும் கதைப்பின்னலும் தொடர்கிற தன்மையைக் காண்கிறோம். அவ்வகையில் அக்கதாபாத்திரத்தின் முழுமையான வடிவத்தை உற்று நோக்கும் அளவில் இக்கட்டுரை அமைகின்றது.

**கலைச்சொற்கள்**

தீண்டாமை, மனம், குடும்பம், குணம், வாழ்க்கை, திருமணம், பாலியல், கல்வி, தனிமனிதம், அறிவியல், நவீனம்.

**ஆய்வு அணுகுமுறை**

இக்கட்டுரையில் பாத்திரத்தையும் சில கருத்தியல்களையும் விளக்கும் முகமாக **விளக்கமுறைத் திறனாய்வும்**, தனிப்பட்ட பாத்திரத்தை முன் வைப்பதால் **பகுப்புமுறைத் திறனாய்வும்** மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சிவகாமியின் நாவல்கள்**

'**பழையன கழிதலும்**' நாவல் தலித் அரசியல் கவனம் கொள்ளவேண்டிய உள் முரணை பெண்ணிய அரசியலாக முன் வைக்கிறது. '**ஆனந்தாயி**' நாவல் ஆண் அடையாளத்தின் வன்முறைகளை உடல், மொழி, மனம் என்ற அனைத்துத் தளங்களிலும் விவரித்து குடும்பம் என்ற அமைப்பை கட்டுடைப்புச் செய்கிறது, அதிகாரத்தின் நுண்கொடுமைகளையும் வரைபடமாக்கித் தருகிறது. '**குறுக்கு வெட்டு**' நாவல் மனம், உடல், பாலியல் மதிப்பீடுகள் பற்றிய கட்டமைப்பை இழைபிரித்துக் கேள்விக்குள்ளாக்குகிறது.

சிவகாமியின் '**உண்மைக்கு முன்னும் பின்னும்**' என்ற நாவல் தமிழ் இலக்கிய உலகிற்கு முற்றிலும் புதிய ஒரு உலகைக் காட்டியுள்ளது. தமிழ் நாவலாசிரியர்கள் பார்க்கத் தவறிய, சொல்லத் தயங்கிய, 'ஐயோ' என்று பயந்து ஒதுங்கிய ஒரு உலகம். அதுதான் நம்முடைய அரசு அலுவலகங்கள். பொது வெளியில் பின்பற்றப்படுகிற ஒழுங்கீனத்தைவிட, தீண்டாமையைவிட நம்முடைய அரசு அலுவலகங்களில்தான் தீண்டாமை கடுமையான விதத்தில் கடைபிடிக்கப்படுகின்றன. சாதி சார்ந்த அணுகுதலும், விலகுதலும் எப்படி சாத்தியமாகின்றன? கடைநிலை ஊழியரிடம் காட்டப்படும் பாரபட்சம், தீண்டாமை, ஒதுக்குதல், புறக்கணித்தல் எப்படி உயர்ந்த பதவியில் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருக்கக்கூடிய நபரிடம் காட்டப்படுகிறது. உயர்ந்த வகுப்பில் பிறந்த ஒரு கடைநிலை ஊழியன் தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்த உயர்ந்த பதவியில் இருக்கக்கூடிய அதிகாரியிடம் ஏன் கீழ்ப்படியாமல் இருக்கிறான்? கீழ்ப்படியாமல் இருப்பது மட்டுமல்ல புறக்கணிக்கவும், ஒரு வகையில் இழிவு படுத்தவும் முடியும் என்பதை சிவகாமியின் நாவல் பேசுகிறது. இதுதான் இன்றைய அரசு அலுவலகங்களின் உளவியல். சமூகத்தின் உளவியலும் இதுவே. **தமிழ் நாவல் உலகம் கண்டிராத வாழ்க்கை இது. சுருக்கமாகச் சொன்னால், இந்நாவல் மாற்று அரசியல் என்றால் என்ன, மாற்று அரசியலில் தனிமனிதர்களின் இடம் என்ன, கருத்தியலுக்கும் செயல்பாட்டுக்கும் இடையிலான உறவு என்ன என்ற ஈவிரக்கமற்ற ஆய்வினைச் செய்கிறது.** நீல பத்மநாபனுடைய 'மின் உலகம்' என்ற நாவலுக்கு அடுத்து, அரசு அலுவலக நடைமுறைகள் குறித்து பேசிய நாவல் 'உண்மைக்கு முன்னும் பின்னும் என்றால் அது மிகையில்லை. இவ்வகையில் இலக்கியச் சொல்லாடல்களாக உள்ள போது கருத்தியல் அமைதி குலைக்கும் தன்மை கொண்ட சிவகாமியின் எழுத்துகள் அரசியல் சொல்லாடலாக மாறும்போது செயல்படும் தன்னிலைகளை உருவாக்க முயல்கின்றன எனலாம்.

**கதைக்கரு**

கதைக்கருதான் படைப்பாளி மனதில் முதன் முதலாகத் தோன்றுகிறது. கதைப்பொருள் பாடுபொருள் நோக்கப்பொருள் என்றும் கதைக்கருவைககூறுவர். இக்கதைக் கருவினை உள்ளிட்டே கதைப்பின்னணி, சமுதாயப்பின்னனணி போன்றவை அமைகின்றன. நாவலின் அனைத்துப் பகுதிகளையும் ஒன்றிணைக்கும் மையப்புள்ளியாகக் அமைகிறது. சமுதாயத்தில் நடைபெறும் எந்தவொரு நிகழ்வும் கதையின் கருவாக அமையலாம். நாவலுக்கு உரிய கதைக்கரு குறிப்பிட்ட ஒன்றைப் பற்றிமட்டுமே இருக்கவேண்டும் என்ற நியதியில்லை. எந்தநிகழ்ச்சியும் கதையின் கருவாக அமையலாம். கதையின் ஒவ்வொரு பகுதியும் கருவை விளக்கிச் செல்லவேண்டும். கதைக்கரு சிறப்பாக அமையப் பெற்ற நாவலே படிப்பவரின் மனதில் ஆழ்ந்த விளைவுகளை ஏற்படுத்தும். ஆனந்தாயி நாவலில் ஆனந்தாயியின் பெண்நிலைதான் கதைக்கருவாக அமைகிறது.

கதைத்தலைவியான ஆனந்தாயி சிறுமியாக இருந்த பொழுதே பெரியண்ணன் என்ற ஆணாதிக்கம் கொண்டவனின் மனைவியாகிறார். தாயை இழந்த ஆனந்தாயி மீது அவள் மாமியார் வெள்ளச்சியம்மாள் அன்புடையவளாக இருந்து, அவளை நெறிப்படுத்தி சிறந்த குடும்பத்தலைவி ஆக்குகிறாள். **ஆனந்தாயி தன் குடும்பத்திற்காக மிகுந்த துன்பங்களை ஏற்கிறாள். குடும்பத்தலைவனான பெரியண்ணன் ஒரு தன்னலவாதி. மனைவியைக் கொடுமைப்படுத்துவது மட்டுமின்றி வேறொரு பெண்ணையும், மனங்காட்டிலிருந்த தன் சொந்த மாடிவீட்டிற்கு அழைத்து வந்து வைத்துக்கொள்கிறான்.** பிறகு சில நாட்களில் அவளையும் அடித்து துன்புறுத்துகிறான். மொத்தத்தில் அவன் ஒழுக்கம் கெட்டவனாகவே இருக்கிறான். ஆனந்தாயிக்கோ எல்லாமே குடும்பம்தான், மக்கள்தான்.

'அவர்கள் நலன்தான் நம் நலன் என்று நினைத்துப் பல இன்னல்களைத் தாங்கிக்கொண்டு வாழ்பவள்' ஆனந்தாயி. எனினும் அவள் **பெண்கள் பிறப்பு தாழ்வானது என நினைக்கும் அளவிற்கு கொடுமைக்கு ஆளாகிறாள் என்பதே ஆனந்தாயி நாவலின் கதைக்கருவாக அமைகிறது.** அதாவது ஒரு பெண் கதாபாத்திரம் தனது கிராமிய வாழ்வில் சமூகத்தாலும் ஆணாதிக்கத்தாலும் என்ன நிலையில் என்னவாறு தன்னைத் தகவமைத்துக்கொள்கிறாள் என்பதும் தன்னைச் சுற்றியுள்ள அனைத்துவிதமான களங்களிலும் எப்படிப் போராடுகிறாள் என்பதும் கதைக்கருவாக அமைகிறது.

இந்த கதைக்கருவினைச் சுட்டும் பகுதியாகவும் ஆனந்தாயியின் நிலையாகவும் நாவலில் ஒரு பகுதியை இங்குச் சுட்டத்தகும்.

**"ஆனந்தாயிக்கு நெஞ்சு திகுதிகுவென்று எரிகின்றது. சமயங்களில், கணவன் தோல் சிவப்பான ஒரு பெண்ணுடன் மடியில் உறங்குகின்றான். இவளோ துக்கம் கல்போல நெஞ்சில் உட்கார்ந்துகொள்ள உறக்கமின்றிப் புரள்கிறாள். முகமறியாத, காலத்தில் இறந்து**

**போன தாய் தந்தை அவளின் ஞாபகத்திற்கு வருகிறார்கள். அத்தோடு கருமேகம் திரண்டு பெய்யும் கனத்த மழை போல அவள் கண்ணில் நீரைப் பெருக்குகிறார்கள்."**[1]

**ஆனந்தாயி - பாத்திரப்படைப்பு**

ஆனந்தாயி, இயல்பிலேயே நல்லகுணம் படைத்தவளாகவே இருக்கிறாள். இயல்பான கிராமத்துப் பெண்ணாகவே வாழ்கிறாள். ஆனால் மிகவும் இளம்வயதிலே பெரியண்ணனுக்கு மனைவியாகிறாள். ஆறு குழந்தைகளை ஈன்றெடுக்கிறாள் ஆனாந்தாயி. கணவன் பொதுமகளை (பணத்திற்காக இன்பத்தைத் தரும் பெண்) வீட்டிலேயே கொண்டுவந்து வைக்கும் போதும் சரி அந்தப் பெண்ணிற்கு எதிரில் தன்னை அடிக்கும் போதும் சரி சிலநேரங்களில் ஆவேசப்பட்டாலும் பல நேரங்களில் அமைதி காக்கிறாள்.

**ஆனந்தாயி எதைச் செய்தாலும் அதைக் குறை கூறிக் கொண்டிருப்பதே அவள் மாமியாரான வெள்ளச்சியம்மாளின் வழக்கம் ஆகும். ஆனந்தாயி அதற்கும் பொறுமை காப்பாள். பிள்ளைகள் தவறு செய்து அது பெரியண்ணனுக்குத் தெரியவந்தால் அதற்கான அடி, உதை முதலியவற்றை அவள்தான் வாங்கிக் கொள்ளவேண்டும். சகிப்புத் தன்மை அதிகம் கொண்ட ஆனந்தாயி இலட்சுமி என்பவளைப் பெரியண்ணன் தன் வீட்டிற்கு அழைத்து வந்து வைத்தபோது அவள், இவளை அக்கா என்று அழைக்கிறாள்.** அதற்கு ஆனந்தாயி, 'யாரடி யக்கா, அக்கா குக்கா என்று கூப்பிட்டால் செருப்பு பிஞ்சிடும்' என்று முதலில் சொன்னவள், பின்னர் சிறிது காலத்தில் நட்புடன் பழகினாள். தன் குடும்பத்தில் அவளைச் சேர்த்துக் கொண்டாள். வந்தவள் பெரியண்ணனிடம் அடிவாங்கும் போது அவளுக்காக இரக்கப்படுபவளாக இருக்கிறாள்.

பிள்ளைகளை வளர்த்துப் பெரியவர்கள் ஆக்கியதும் தன் கடமை முடிந்துவிட்டது என்று எண்ணாமல் அவர்களைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தாள். ஏனென்றால், ஒரு மகனை இழந்த சோகம் அவளுடைய மனதில் இன்னும் நிலைத்திருந்தது. பெரியண்ணன் பகைமை காரணமாக அடுத்தவர் காட்டில் விளைந்த கம்பை எடுத்துக் கொண்டு வந்து தனது வீட்டில் வைத்திருப்பதை அறிந்து அதை ஆனந்தாயி எதிர்த்தாள். பிறகு பெரியண்ணன் குழுவினர் வீண்சண்டைக்குச் செல்லும் போது அவர்களைத் தடுப்பதில் கவனமாக இருந்தாள்.

ஆனந்தாயி, தன் பிள்ளைகள் அனைவருக்கும் திருமணம் முடித்துவிட்டு தன் பேரக்குழந்தைகளுடன் கொஞ்சும் போதும் சரி அவள் தன் இயல்பைச் சற்றும் மாற்றவில்லை. இப்படியாக ஆனந்தாயியின் வாழ்க்கைச் சக்கரம் சுழல்கிறது. அவள் தீயவழியில் கணவன் சென்றாலும் பொறுமையோடும் கற்போடும் வாழும் பெண்ணாகப் படைக்கப்பட்டிருக்கிறாள் மணமான பெண்ணுக்கு அறிவுரைகூறி, ஏனைய மகளின் நிலைக்காக ஏங்கும் தாய்மை உணர்வை ஆனந்தாயி மூலம் காணலாம்.

**ஆனந்தாயி - பாத்திர அறிமுகம்**

நாவலில் பாத்திரப் படைப்பு இன்றியமையாததாகும். நல்ல நாவல்களின் அடிப்படையே பாத்திரப் படைப்புத்தான் என்று கூறுமளவிற்கு நாவலில் பாத்திரப் படைப்பு மிகச் சிறந்த கூறாக அமைந்துள்ளது. **"நாவல் கூறுகளில் முதன்மையானது, சிறப்புமிக்கது, நெஞ்சைக் கொள்ளை கொள்வது பாத்திரப்படைப்பே ஆகும்"**[2] ஒரு நாவலாசிரியரின் படைப்புத் திறமையை அறிய அவர் பாத்திரப்படைப்பில் பெறுகின்ற வெற்றியே அளவுகோல் ஆகும். ஒரு சிறந்த நாவலாசிரியரின் வெற்றி ஒருசில மறக்க முடியாத பாத்திரங்களைப் படைப்பதில் அடங்கி உள்ளது. **"ஒருகதையில் மிகவும் முக்கியமாகக் கருதக் கூடியவை கதாபாத்திரங்கள், புத்தகத்தை மூடினதும் கதையின் நிகழ்ச்சிகள் மறந்துபோனாலும் அமைக்கப்பட்ட பாத்திரங்கள் நம்முன் நடமாட வேண்டும்"**[3] என்பது இங்கு கவனிக்கத் தக்கது.

திரைக்கதையில் ஒரு விறுவிறுப்பு ஏற்படுத்த, தொடக்கக் காட்சியிலேயே ஓர் ஆர்வத்தைத் தூண்டும் காட்சி அமைவதுபோல் இங்கு நாவலிலும் ஆனந்தாயி என்ற மைய கதாபாத்திரம் மூலம் அவளது நிலையின் மூலம் ஓர் ஆர்வம் தூண்டப்படுகிறது.

"ஆனந்தாயி இருளில் உலாத்திக்கொண்டிருந்தாள் பின்னிரவு நேரம் . இரண்டாம் ஆட்டம் சினிமா முடிந்து செல்பவர்களின் சப்தம் முன்புதான் ஓய்ந்தது. ஆயிற்று, விடியற்காலை குழந்தை பிறந்துவிடும். ஒரு வாரமாகவே ஆனந்தாயிக்கு விளங்கிவிட்டது. நாட்களைச் சரியாகக் கணக்கிட முடியாத படிக்கு விலக்கு வருமுன் தரித்து விடுவாள் என்றாலும், **நெற்கழனியில் துள்ளும் தலைப்பிரட்டை போல் வயிற்றுக்குள் துடித்துக் கொண்டிருந்த சிசு துள்ளல் அடங்கி, கருப்பை வாயில் தலையை நிறுத்தி வெளிவரத் தயாராகிவிட்டது** என்பது ஐய்ந்தாம் முறையாகப் பிரசவிக்கும் ஆனந்தாயிக்குத் தெரியாதா?"4 என்று நாவல் தொடக்கமே குழந்தைப் பெறும் கருவியாகக் காட்சிப்படுத்தப்படுகிறாள் ஆனந்தாயி.

ஒரு மைய பாத்திரம் இத்தனைப் பிள்ளைகளைப் பெற்று என்ன பாடுபடுகிறதோ என்று எண்ணுவதற்குள் வரிசையாக அவள் அடுத்து அடுத்து அவள் மாமியாரிடமும் கணவனிடமும் பிள்ளைகளிடமும் படும்பாட்டினை இன்னும் அழுத்தமாகப் பதிவு செய்தபடி நகர்கிறது பாத்திர வார்ப்பு.

**ஆனந்தாயியின் உழைப்பு**

வீட்டில் வேலை செய்வதற்கு ஆட்கள் இருந்தாலும் ஆனந்தாயி கடினமாக உழைப்பவளாகவே இருந்தாள். பிள்ளைகள் உண்பதற்கு என்று கவனமாக சமையலைப் பார்த்துக்கொண்டாள்.

"ஆனந்தாயி சோற்றை வடித்துத் தாங்கடையில் கொட்டிக் குழம்புக் கரண்டிக் கம்பால் கட்டியை உடைத்தாள். பெரியண்ணனுக்கு ஒரு சாதத்தோடு ஒரு சாதம் ஒட்டக்கூடாது. புழுங்கலரிசிச் சாதத்தின் மணம் வீடெங்கும் பரவியது. அதன் ஆவி அடித்து ஆனந்தாயிக்கு வியர்வை முத்துக்கள் அரும்பின முகத்தில். அடுப்பிலே மிளகாய் புளியுடன் கத்தரிகாய் வெந்து கொண்டிருந்தது. வெந்த பருப்பைக் கொட்டி, வடகம் போட்டுத் தாளித்து இறக்க வேண்டும். முருங்கைக் கீரையை உருவச் சொல்லி பாட்டியிடம் முறத்தைக் கொடுத்திருந்தாள். கிழவிக்குக் கண் பார்வை மங்கிவிட்டது. புழு பூச்சியுடன் பழுப்பு இலைகளையும் சேர்த்து உருவிப் போட்டிருந்தது. பார்த்துக் களைந்து விட்டு வதக்க வேண்டும்."[5] என்பதில் ஆனந்தாயியின் கடின உழைப்பு பேசப்படுகிறது. இவ்விதம் சமையலில் கெட்டிக்காரியாக இருக்கும் ஆனந்தாயி கணவனைக் கண்டிக்கத் தெரியாதவளாக இருக்கிறாள் என்று சொல்லாமல் சொல்லப்படுவதாகக் கொள்ளலாம்.

### சேமிப்பும் நினைப்பும்

ஆனந்தாயி பிளைகளுக்காகச் சேமிப்பதா கணவனின் நிலையைக் கண்டிப்பதா என்னும் நிலைக்குத் தள்ளப்படுவதை நாவல் மிக அழகாகச் சுட்டிக் காட்டுகிறது.

"ஆனந்தாயிக்குத் தலை கிறுகிறுப்பாக வந்தது. கலா இந்த வருடம் வயசுக்கு வந்துவிடுவாள். பார்த்தால் அப்படித்தான் தெரிகிறது. அவளுக்கு ஜிமிக்கி செய்து போட்டால் பரவாயில்லை. கொத்தமல்லி வந்ததும் களத்திலே ரெண்டு மூட்டையைத் தெரியாமல் விற்றுவிட வேண்டும். ஜிமிக்கி வாங்கிய மீதியில் இரண்டு ஆட்டுக்குட்டிப் பிடித்து விட்டால் பரவாயில்லை. போகத்துக் இரண்டு குட்டி போடும். இந்தாளுக்குத் தெரியக் கூடாது. சம்பாதிக்கிற பாதி கூத்தியாளுக்குப் போயிடுது.

கான்ரைட்டு எடுத்த இடத்திலே ஏதாவது தொடுப்பு இருக்கும்; இல்லாவிட்டால் மூன்று நாளைக்கு ஒரு தடவை மட்டுமே வீட்டுக்கு வருவானேன்.

**நினைக்கவே கசந்தது அவளுக்கு. தாம்பத்ய வாழ்க்கை இனி தனக்கு இல்லை. பிள்ளைகளுக்குத் தாய் மட்டுமே....குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டே கண்ணீர் உகுத்தாள்."**[6] என்பதில் ஆனந்தாயி கணவனின் செயலுக்காகத் தனது தாம்பத்ய உறவை அறுத்துக் கொண்டவளாகவும் பிள்ளைகளுக்காக வாழவேண்டிய மனநிலையை உடையவளாகவும் சித்தரிக்கப்படுகிறாள்.

### தற்கொலை முயற்சி

ஆனந்தாயி எவ்வளவுதான் மனதைச் சமநிலைப்படுத்த முயன்றாலும் அவளால் ஒரு கட்டத்தில் முடியாமல் போகிறது. பெரியண்ணன் அவனது குழந்தைகள் தவறு செய்தாலும் அதுதான் வாய்ப்பு என்று தன் மனைவி ஆனந்தாயியையும் அடித்து துவைத்து விடுகிறான்.

வீட்டு வேலைகளைச் செய்து பிள்ளைகளைக் கவனித்து ஆடுகளை மேய்த்து காடுகரைப் பார்த்து என அவளால் முடிந்த எல்லாவற்றையும் செய்து, கணவனையும் கண்டும் கண்டு கொள்ளாமலும் விட்டதற்கு அவளுக்குக் கிடைத்த பதில் அடி உதைகள்தான். இந்த நிலையில் அவள் தற்கொலை முயற்சிக்கும் வந்து விடுகிறாள்.

"வாழ்நாள் முழுவதும் தான் துன்பப்படுவது போலவும் இதற்கு இனி விடிவே கிடையாது போலவும் தாய் தகப்பன் மட்டுமே சாகவில்லை, தன்னைப் பொறுத்த வரையில் எல்லா உறவுகளுமே செத்துப் போய்விட்டதாகவுமான முடிவில்லா வெறுப்பு உள்ளத்தில் கமற அந்த நொடி வீணாக்க விரும்பாததுபோல் வாத நாராயண விறகை சமையலறை விட்டத்தில் போட்டாள். சுருக்கை மாட்டி இழுத்தவள், இரவு பாலாடைக்காகக் கையேந்தி நின்று கொண்டிருந்த அருள், வாணி வாய் ஒழுகத் தூங்கவும் அவளை ஒட்டினாற்போல் பாலாடை மொய்த்துக் கொண்டிருந்த எறும்புகளைப் பார்த்ததும் மனம் மாறி குரல் உடைந்தது"[7].

**பாலியல் பலாத்காரமும் பெண்களும்**

இந்நூற்றாண்டில் ஆணுக்கு நிகராக எல்லாத்துறைகளிலும் பெண்கள் முன்னேறி வருகிறார்கள். அவர்கள் முன்னேற்றத்திற்கு இடையூறாக இருந்த தடைக்கற்கள் நீக்கப்பட்டன என ஒரு பொதுக்கருத்து நிலவி வரும் நிலையில் வீடு, தெரு, பணிபுரியும் களங்கள் என அனைத்து இடங்களிலும் குடும்ப உறவினர், அலுவலகத்தில் உடன் பணிபுரிபவர், குடும்ப நண்பர் போன்றோரால் பெண் உடல் மீது நிகழும் வன்கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகரித்து அடக்குவதற்குப் பாலியல் வன்முறை ஒரு கருவியாகப் பயன்படுகிறது. தன்னால் வெல்ல முடியாத ஆணை வீழ்த்த வீழ்த்த அவன் உடமையாகக் கருதப்படும் பெண்ணைச் சீரழிப்பதையும் பெண்ணைப் போகப் பொருளாகவும், உடமைப் பொருளாகவும் கருதி அவளைச் சிதைப்பதையும் படைப்பிலக்கியங்கள் உணர்த்தி நிற்கின்றன.

மாணவர்களுக்கு நல்லொழுக்கத்தைப் போதிக்க வேண்டியவர்கள் ஆசிரியர்கள். அவர்களில் ஒருசிலர் மாணவிகளிடம் பாலியல் பலாத்காரம் செய்கின்றனர். இந்நாவலில் அத்தகைய காட்சி ஒன்றும் சித்தரிக்கப்பட்டுள்ளது ஆசிரியர் ஒருவர் ஒரு பள்ளிக்கூடப் பெண்ணை (நீலவேணி) பலாத்காரம் செய்கிறார். அதனால் அந்த வருட பள்ளிப்படிப்பில் அவளால் தேர்ச்சிப் பெற முடியவில்லை இந்த நிகழ்ச்சியினால் அவளுக்கு ஆண்கள் மீது வெறுப்பு ஏற்பட்டு பிற்காலத்தில் திருமணம் செய்து கொள்ளாமலே வாழ்கிறாள். இளமையில் ஏற்பட்ட பாதிப்பு அவளை வருந்தியழவைக்கிறது எந்தத் தவறும் செய்யாத பெண் இப்படி வருந்துகிறேன். ஆனால், கங்காணியின் மகனான இராஜமாணிக்கம் இளமையிலிருந்து மது அருந்துதல், பிறபெண்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளுதல் என்று வாழ்கிறான். அவனை ஊரார் '**மைனர்**' என்று செல்லமாக அழைக்கிறார்கள். இவன் தீய பழக்கம் உடையவன் என்றும் தெரிந்தும் கூட பெண்கள் இவன் மீது மையல் கொள்கிறார்களே இது எப்படி என்று எண்ணி

ஆச்சரியப்படுகிறாள். மேலும் தன் வாழ்க்கையில் இளமையில் ஏற்பட்ட அனுபவத்தினால் கங்காணி வீட்டிற்கு வீட்டுவேலை செய்வதற்காக வரும் பூங்காவனத்திடம் **“அண்ணன் (இராஜமாணிக்கம்) ஒரு மாதிரி; நெருங்கிப் பழகுற வேலை வச்சுக்காத”**[8] என்ற நேரடியாகவே சொல்கிறாள். பாதிக்கப்பட்ட பெண் மற்றொரு பெண்ணிற்கு அறிவுரை வழங்கி எச்சரிக்கிறாள். இவ்வாறு ஆணுக்கொருநீதி பெண்ணுக்கொருநீதி என்ற சமூக அவல நிலையை எடுத்துரைக்கிறார் சிவகாமி.

**பொருளாதாரமும் பெண்களும்**

வீட்டு வேலைகளோடு வயல்வேலைகளைச் செய்யும் ஆனந்தாயி பின்வருமாறு பேசுகிறாள்.

**“அதோட நிறுத்திக்க நானும் வயல்லே பாடுபட்டனே வீட்டில தினமும் வடிச்சுக் கொட்டறனே அதுக்கெல்லாம் கூலி கணக்குப் பண்ணி குடுத்திடு”**[9] என்று கணவனிடம் வழக்காடி அல்லற்படுவதைச் சிவகாமி காட்டுகிறார். பெண்களின் அடி மனதில் எழும் எதிர்ப்புணர்வு ஒரு சில நேரங்களில் பொங்கி எழுந்து இவ்வாறு வெளிப்படுகிறது. மூளை உழைப்பிற்கு ஊதியம் வழங்கப்படுவது போல உடல் உழைப்பிற்கும் ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வைச் சிவகாமி முன்வைக்கிறார். சிறிய சிறிய செலவுகளுக்காக, பெண்கள் சிறுவாடு சேர்க்கும் வழக்கம் ஏற்படுகிறது.

பொருளாதாரத் தற்சார்பற்ற பெண்களுக்குத் திடீர் செலவுகளுக்கும், குடும்பச் செலவுகளுக்கும் சிறுவாடு அவசியமாகிறது. சிற்றூர்ப்புறங்களில் வாழும் பெண்கள் மிகவும் சிக்கனத்துடன் வாழப் பழகிக் கொள்கிறார்கள். பணம் சம்பாதித்த போதிலும் கணவன் வீண் செலவு செய்வதால் ஆனந்தாயி, கொத்தமல்லி வந்ததும் களத்திலே ரெண்டு மூட்டையைத் தெரியாமல் விற்றுவிட்டு தன் மூத்த மகள் கலாவுக்கு ஜிமிக்கி செய்துபோட வேண்டும்; மீதிப் பணத்தில் இரண்டு ஆட்டுக்குட்டி பிடித்து விட்டால் போகத்துக்கு இரண்டு குட்டிபோடும் என்று திட்டமிடுகிறாள். தன் வீட்டு விளைச்சலில் வரும் பொருள்களை விற்றுக் குழந்தைகளுக்காகச் சேமிக்க வேண்டும் என்று செயல்படுகிறாள். இதிலிருந்து ஆனந்தாயியின் பேச்சும் மூச்சும் குழந்தைகளுக்காகவும், குடும்பநலனிற்காகவும், பிறருக்கு உதவுவதற்காகவும் உள்ளது என்பது புலனாகிறது.

**முடிவுரை**

ஆனந்தாயி கிராமத்தின் எதார்த்த பாத்திரமாக அமைகிறாள். அவளுக்கு கல்வியறிவைவிட அனுபவ அறிவு இருந்தாலும் அதை அவள் பரிசோதித்துப் பார்ப்பதில்லை. கிரமத்தின் கட்டமைப்புக்குள் தன்னை உட்படுத்திக் கொண்டாலும் அவளுக்குள் உள்ள நீதி, நேர்மை அவளை உன்னதமான பெண்ணாகவே காட்சிப்படுத்துகிறது. அவளால் மரபுத்

தளையிலிருந்தும், ஆணாதிக்கத்திலிருந்தும், பெண்ணுக்கு உள்ள வலி, சுமை, துன்பம் என்பதிலிருந்தும் விடுபட முடியவில்லை. இன்பத்தைக் கடுகளவு சுமந்து துன்பத்தை பெருமூட்டையாக இறக்கி வைக்க முடியாமல் திணறுகிறாள். இவ்வகையில் எழுத்தாளர் சிவகாமி அவர்கள் இந்நாவலில் ஆனந்தாயி பாத்திரம் மூலம் ஆணாதிக்கத்தைத் தோலுரித்துக் காட்டியுள்ளார்.

**சான்றாதாரங்கள்**

[1] சிவகாமி, ஆனந்தாயி, ப. 145. அடையாளம் பதிப்பகம், திருச்சி, மு.ப. 2011.

[2] மோகன், இரா., டாக்டர்., மு.வா.வின் நாவல்கள், ப.57, மணிவாசகர்நூலகம், சிதம்பரம், மு.ப.1981.

[3] கலைக்களஞ்சியம், தொகுதி -ஆறு, ப.423, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, மு.ப.1959.

[4] சிவகாமி, மு.நூ, ப. 1.

[5] மேலது, ப. 44.

[6] மேலது, ப. 100.

[7] மேலது, ப. 107

[8] மேலது, ப. 123

[9] மேலது, ப. 163